# சுபீட்சம்

SUPEEDSAM – EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சனிக்கிழமை 07.01.2023 | supeedsam.com | supeedsam@gmail.com





நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட

www.supeedsam.com


# மத நல்லிணக்கத்தினை சீர்குலைக்க முயல்வோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை!

## நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ



மத நல்லிணக்கம் மற்றும் இன நல்லிணக்கம் நாட்டில் கட்டி எழுப்பப்பட்டுள்ள நிலையில் அதனை சீர்குலைக்க முயல்வோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், ஸ்ரீதலதா மாளிகையை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்த நபருக்கு தண்டனைச்சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ் அரசுக் கட்சியின் உப தலைவராகிறார் சாணக்கியன்?

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தற்போதைய உப தலைவராக உள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராஜா பதவியில் இருந்து விலக போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அவர் நாளைய தினம் (சனிக்கிழமை) மட்டக்களப்பில் நடைபெறவுள்ள மத்திய குழு கூட்டத்தின் போது பதவி விலகலை உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அடுத்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மட்டக்களப்பு உட்பட ஏனைய மாவட்டங்களில் இளைஞர் சமுதாயத்துடன் ஒன்றித்து செயற்பட கூடிய ஒரு இளம் சிரேஷ்ட உப தலைவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என கட்சி

02 ஆம் பக்கத்தில்...



## வடக்கு, கிழக்கில் காணி விடுவிப்பு தொடர்பில் தைப்பொங்களில் விசேட அறிவிப்பு?



வடக்கு கிழக்கு காணி விடுவிப்பு தொடர்பில் எதிர்வரும் 15ஆம் திகதி தைப்பொங்கல் தினத்தில் அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக ஜனாதிபதி அறிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம்

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் நாட்டை வந்தடைந்தார் கோட்டா!

ஐக்கிய அரபு அமீரகத்திற்கு தனிப்பட்ட சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இன்று (வியாழக்கிழமை) இலங்கை வந்தடைந்தார்.

அதன்படி இன்று காலை ராஜபக்சவும் அவரது மனைவியும் டுபாயில் இருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததனர்.

கோட்டாபய ராஜபக்ஷ, மனைவி அயோமா ராஜபக்ஷ, மகன் தமிந்த ராஜபக்க்ஷ, மருமகள் எஸ்.டி.ராஜபக்ஷ மற்றும் அவரது பேரக்குழந்தையுடன், கடந்த டிசம்பர் 26ஆம் திகதி நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

முன்னதாக, டுபாயின் தனியார் 'ஃபேம் பார்க்' இல் உரிமையாளர் கைஃப் அஹமட் பெல்ஹாசா மற்றும் பல விலங்குகளுடன் கோட்டாபய எடுத்த புகைப்படங்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## அரசியல்வாதிகள் தான் நாட்டை சீரழித்துள்ளார்கள்

### சரத் பொன்சேகா

புனர்வாழ்வு சட்டத்தை இயற்றி முதலில் அரசியல்வாதிகளுக்கு புனர்வாழ்வளிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஏனெனில் அரசியல்வாதிகள் தான்

02 ஆம் பக்கத்தில்...

## பணத்தை அச்சடித்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் முதல் நாடாக இலங்கை மாறும்

### ரஞ்சித் சியம்பலாபிட்டிய!



பாரிய பொருளாதார நெருக்கடியின் போது பணத்தை அச்சடித்து உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தும் முதல் நாடாக இலங்கை மாறும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

தெரணியகல பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் இன்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடம் 2 ஆயிரத்து 500 பில்லியன் ரூபாய் நாணயத்தாள்கள் அச்சிடப்பட்ட போதிலும், அவை அன்றாட செலவுகளுக்கு பயன்படுத்தப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்

## அமைச்சர் மனு நாணயக்காரவிற்கு எதிராக சபாநாயகரிடம் முறைப்பாடு செய்ய தீர்மானம்!



தொழிலாளர் மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவிற்கு எதிராக சபாநாயகரிடம் முறைப்பாடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மனுஷ நாணயக்கார கடந்த டிசம்பர் மாதம் 22ஆம் திகதி நடைபெற்ற நிகழ்வொன்றின் போது கணக்காய்வாளர் நாயகத்தின் கடமைகளையும் இஙிகஉ குழுவின் அதிகாரங்களையும் ஆட்சேபனைக்கு உட்படுத்தி, விமர்சனங்களை முன்வைத்ததாக நாடாளுமன்ற தொடர்பாடல் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நேற்று நடைபெற்ற இஙிகஉ குழு கூட்டத்தின் போது

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

கல்வியே துணை

பள்ளித் தலைமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா–வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch, Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr:35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598 | 25605: cicero




## எரிவாயு விலையை குறைக்கின்றது கேஸ் நிறுவனம்!




லாஃப்ஸ் கேஸ் நிறுவனம் எரிவாயு விலையை குறைக்க தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, கொழும்பு மாவட்

02 ஆம் பக்கத்தில்...

# அருந்ததி நிறுவனம் மணப்பெண் அலங்காரம் 10ஆம் திகதி கலாதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது

(அஷ்ரப் ஏ சமத்)

அருந்ததி நிறுவனம் எதிர்வரும் 10 ஆம் திகதி கொழும்பு கலதாரி ஹோட்டலில் மிகப் பிரமாண்டமாக ஏற்பாடு செய்துள்ள மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார மற்றும் கேக் தயாரிப்பு கண்காட்சி நிகழ்வு தொடர்பான ஊடக மாநாடு கலதாரி ஹோட்டலில் 04/01/2023 நடைபெற்றது. இந் ,நிகழ்வில் அருந்ததி நிறுவனப் பணிப்பாளர் செல்வி மேகலா கருத்துத் தெரிவிக்கையில் எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதி கொழும்பு கலாதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ள மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்விற்கு கொழும்பு, மட்டக்களப்பு,கிளிநொச்சி ,கண்டி வவுனியா கம்பஹா, போன்ற பிரதேசங்களில் இத்துறை சார்ந்த மணப்பெண் வடிவலமைப்பாலர்கள், கேக் தயாரிப்பாளர்களில் சிறந்த வடிவமைப்பாளர்களது திறன்களை மேலும் வலுவூட்டி அவர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கவே கொழும்பில் உள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் மாற்று மோதிரம் மீண்டும் இவ்வருடமும் மேடையேற்றப்படுகின்றது. இந் நிகழ்வினைக் கண்டு களிக்கவும் ஆரம்பித்து வைப்பதற்கும் கபினட் அமைச்சா்கள் மற்றும் வி.ஐ.பியினா்கள் வர்த்தக சமுகத்தினா்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.







கடந்த ஆண்டு மட்டக்களப்பு , யாழ்ப்பாணம், கொழும்பு கண்காட்சி நிகழ்வுகளில் கூடுதலான பெண்கள் இத்துறையில் பிரபல்யம் பெற்றுள்ளனா்.நமது நாட்டில் இடம்பெற்று வருகின்ற பொருளாதாரம், மற்றும் கொவிட் 19 பிரச்சினைகளால் இத்துறை சார்ந்தவா்கள் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். தற்பொழுது இத்துறையினாலேயே பல்வேறு பெண்கள் தமது சுயதொழில் முயற்சியில் ஈடுபட்டு அதற்கான டிப்ளோமா. என்.வி.கியு போன்ற அங்கிகாரம் பெற்று வெளிநாடுகளுக்குச் சென்று வடிவமைப்புத்துறையில் டிப்ளோமா மற்றும் பட்டப்படிப்புத் தரத்தில் கற்றுள்ளார்கள். இத்துறை சார்ந்தவர்கள் தமது வாழ்வதாரத்தினை உதவு முகமாகவும் தேர்ந்தெடுத்து அத் தொழிலாக வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றனர். அத்துடன் திருமண புகைப்படப்பிடிப்பாளா்கள், வீடியோ, தோரணை அலங்காரம், பூ வடிவமைப்பாளர் திட்டமிடுபவா்கள் , மணப்பெண் மணமகன் சஞ்சிகை , அதற்கான உடைகள் அலங்காரம் செயற்படுத்துவர்களும் இத்துறையில் தங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அருந்ததி நிறுவனம் ஏற்கனவே கொழும்பு பி.ஐ.எம்.சி.எச், வவுனியா யாழ்ப்பாணம், மட்டக்களப்பு , போன்ற பிரதேசங்களில் ஐந்து முறைகள் இக் கண்காட்சியை வெற்றிகரமாக நடத்தியுள்ளோம். எமது மாற்று மோதிரம் திட்டம் மட்டுமே இலங்கையில் உள்ள மணப்பெண் மற்றும் கேக் வடிவமைப்பாளர்களை ஒரே கூரையின் கீழ் கொண்டு வந்துள்ளோம். அத்துடன் இம்முறை 50க்கும் மேற்பட்டவர்களது வடிவமைப்புக்களை மேடையேற்றுகின்றோம்.

இம் ஊடக மாநாட்டில் மாற்று மோதிரம் மணப்பெண் அலங்கார நிகழ்வின் பிரதம இணைப்பாளரும், ஆலோசகருமான கந்தசாமி கருணாகரன், எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ். செந்தில்நாதன், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோறும் கலந்து கொண்டனர்.

# மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் அரச பணியிலிருந்து ஓய்வு!

(சுதா)



மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடந்த 2020 செப்டம்பர் மாதம் முதல் 2022.12.31 வரை கடமையாற்றி வந்த கணபதிப்பிள்ளை கருணாகரன் அவர்கள் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவர் 1984 ஆம் ஆண்டு வானிலை அவதானிப்பாளராக வளி மண்டல திணைக்களத்தில் அரச கடமைக்கு சேர்ந்த பின்னர் ஆறு வருடங்கள் விஞ்ஞான பட்டதாரி ஆசிரியராக கடமையாற்றி வந்த நிலையில், 1991 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்குள் திறந்த போட்டி பரீட்சை மூலம் தெரிவானார்.

அதன் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச செயலாளராகவும், மாவட்ட செயலகத்தில் புணர்வாழ்வு இணைப்பாளராகவும் பணிபுரிந்த இவர் இலங்கை அரசின் புலமை பரிசு பெற்று லண்டன் சென்று, சர்வதேச பொது முகாமைத்துவத்தில் முதுமாணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். 2009 ஆம் ஆண்டு பதவி உயர்வு பெற்று கிழக்கு மாகாண சபையின் பிரதிப் பிரதம செயலாளராக பதவியேற்றார். அதன் பின்னர் கிழக்கு மாகாண பேரவையின் செயலாளராகவும், சுகாதார அமைச்சின் செயலாளராகவும், வீதி அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சின் செயலாளராகவும் பல்வேறு பதவிகளை வகித்த பின்னர் 2020 செப்டம்பர் மாதம் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபராக கடமையினை பொறுப்பேற்றார்.

இவர் அரசாங்க அதிபராக கடமை வகித்த காலப்பகுதியில் நாடு எதிர் நோக்கிய கொரோனா வைரஸ் தாக்கம் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் மாவட்ட நிர்வாகத்தை திறம்பட மேற்கொண்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச மற்றும் அரசு சார்பற்ற நிறுவனங்களின் மூலம் தம்மால் முடியுமான உச்ச அளவிலான நிவாரணத்தை பெற்றுக் கொடுத்ததுடன் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு பல் வகையான உபகரணங்கள் கிடைப்பதற்கு பல தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து பணியாற்றியிருந்தார்.

இந்நிலையில் மாவட்டத்திலுள்ள ஒட்டுமொத்த விவசாயிகளின் நலனிலும் அதிக அக்கறையுடன் செயல்பட்டதுடன் அவர்களுக்கான எரிபொருள், உரம் மற்றும் நீர்ப்பாசன பிரச்சினைகளுக்கு தம்மால் முடியுமான உரிய தீர்வை சம்பந்தப்பட்ட அமைச்சிகளினூடாக பெற்றுக் கொடுத்திருத்தார்.

அது மாத்திரம்மின்றி இவரது காலத்தில் பலதரப்பட்ட இனங்களுக்கு மத்தியில் பல்வேறு வேலை திட்டம் மற்றும் நிகழ்வுகளினூடாக இன நல்லுறவை கட்டி யொழுப்புவதில் அதிக அக்கறையுடன் செயல்பட்டதுடன் இவர் அரசாங்க அதிபராக கடமை வகித்த காலப் பகுதியில் மாவட்டத்தில் எவ்வித இன முரண்பாடுகளும் ஏற்படாத வகையில் தமது பணியினைத் தொடர்ந்து வந்தார்.

மேலும் இளைஞர்களை போதைப் பொருள் பாவனையில் இருந்து மீட்பதற்கும் அது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் போதைப் பொருள் பாவனையற்ற மாவட்டமாக மாற்றி அமைப்பதற்கான பல்வேறு வேலை திட்டங்களை உச்ச அளவில் பொலிசார் மற்றும் இராணுவத்தினர், சுகாதாரத் துறையினர், மற்றும் பிரதேச செயலாளர்கள் ஏனைய அரசசார்பற்ற நிறுவனங்களுடனும் இணைந்து வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வந்தார்.

இவ்வாண்டு மட்டக்களப்பு மாவட்டத்தை சேர்ந்த சர்வதேச, தேசிய, மாகாண மட்டத்தில் சாதனை படைத்த விளையாட்டு வீரர்கள் , கல்வியில் சிறந்த அடைவுமட்டத்தை பெற்ற மாணவர்களை பாராட்டி 'வர்ண விருது' நிகழ்வை சிறப்பாக நடாத்தியதுடன் அவர்களை கௌரவித்து 'வெற்றி' எனும் சிறப்பு மலரையும் மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வெளியிட்டிருந்தது. இவ்வாறான நிலையில் தமது பணியினை நேர காலம் பாராது மிகச் சிறப்பாக மேற்கொண்டு வந்த மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் அவர்கள் அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது சேவையினை மாவட்டத்தின் அனைத்து இன மக்களும் உயர்வாக மதித்து பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# காப்போம் அமைப்பின் 2023 ஆண்டிற்கான முதலாவது மக்களுக்கான சேவை ஆரம்பிப்பு!







மட்டு.துஷாரா -

கடந்த பல வருடங்களாக மக்களின் துயரங்களில் பங்கெடுத்து அவர்களுக்கான உதவிகளை உடனுக்குடன் நல்லுள்ளங்களின் ஒத்துழைப்புடன் வழங்கி வரும் காப்போம் அமைப்பின் 2023 ஆம் ஆண்டுக்கான முதல் சேவையை கடந்த 05 ஆம் திகதி ஆரம்பித்துள்ளது.

தாயார் யோகநாயகம் தவமணி தேவியின் 60வது பிறந்த தினத்தை சிறப்பிக்கும் வகையில், காப்போம் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட திருகோணமலை மாவட்ட செவிப்புலன் வலுவற்றோர்களுக்கு புதிய ஆடைகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று (05) மட்டிக்களி செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன மண்டபத்தில் இடம்பெற்றது.

காப்போம் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதீப்கரன் (திலீப்) தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு, திருகோணமலை மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் எஸ்.பரமேஷ்வரன் பிரதம அதிதியாகவும், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஏ.பி.எஸ்.எம்.அத்தநாயக்க, மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மைக்ரோ பினான்ஸ் ஒருங்கிணைப்பாளர் கே.நிர்மலகாந்தன் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கிழக்கு மாகாண சமூகசேவை திணைக்களத்தின் தொழில்சார் நிலைய பொறுப்பதிகாரி (திருமதி) ஜீவிதன் சுகந்தினி, திருகோணமலை பிரதேச செயலக சமூக சேவைகள் அதிகாரி சிவநேசன், திருகோணமலை மாவட்ட செயலக முதியோர் மேம்பாட்டு அதிகாரி ஏ.எல்.முகமது இர்பான் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது, செவிப்புலன் வலுவற்ற 100 பேருக்கு புதிய ஆடைகள் வழங்கி வைக்கப்பட்ட அதேவேளை அன்றையதினம் அவர்களின் குடும்பங்களுக்கு மதிய உணவும் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கிலங்கையில் முதலாவது வேதாகம பாடசாலை ஆரம்பித்து வைப்பு





(ரக்ஸனா)

கிழக்கிலங்கையில் முதலாவது வேதாகம பாடசாலை ஒன்று கிழக்கிலங்கை இந்துக் குரமார் ஒன்றியத்தினால் உத்தியோக பூர்வமாக புதன்கிழமை(04.01.2023) மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் வைத்து ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கிழக்கிலங்கை இந்துக்குருமர் ஒன்றியத்தின் களுவாஞ்சிகுடி கிளைத்தலைவர் அங்குச சர்மா குருக்கள் அவர்களின் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஆரம்ப நிகழ்வில் கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் லோகநாதக் குருக்கள், உள்ளிட்ட பல சிரேஸ்ட குருமார்கள், சிவாச்சாரியார்கள், கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தனர்.

ஆரம்பத்தில் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையாருக்கு பூஜை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் மாணாக்கர்களுக்கு பிரதம குருமார்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டன. தொடர்ந்து கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியத்தின் தலைவர் லோகநாதக் குருக்கள் அவர்களால் வேதாக பாடலை ஆசிரியர்களாக தெரிவு செய்யப்பட்ட இரு குருமாருக்கான நியமனக் கடிதங்களை வழங்கி வைத்தார்.

பின்னர் இதன்போது நியனம் பெற்ற இரு குருமார் உத்தியோக பூரமாக வேதாகக் கல்வியை இதன்போது ஆரம்தித்து வைத்தனர். இப்பாடசாலை தினமும் குறிப்பிட்ட நேரத்திற்கு களுவாஞ்சிகுடி ஸ்ரீ மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறும் எனும் என இதன்போது அறிவிப்பட்டது.

கிழக்கிலங்கையில் தாம் பல்வேறு வேலைத்திட்டங்களைச் செய்து வருவதாகவும். கிழக்கில் இந்து சமய நெறிமுறைகளை சீரமைத்து கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதற்காகவும், இளம் குருமாரை முறையாகப் பயிற்றுவிப்பற்காக வேண்டி கிழக்கில் இந்த முதலாவது வேதாகம பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இதன்போது கலந்து கொண்ட பிரதம குருமார் தெரிவித்தனர்.

## எரிவாயு விலையை...

டத்தில் 12.5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 5080 என அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு மாவட்டத்தில் 5 கிலோ கிராம் லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரின் புதிய விலை 2032 ரூபாய் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

ஏனைய மாவட்டங்களுக்கு ஏற்ப மாறுபடும் விலைகளை அறிய வாடிக்கையாளர் சேவை எண்ணான 1345 ஐ அழைக்குமாறு அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

## வடக்கு, கிழக்கில் காணி விடுவிப்பு...

அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அந்தக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று (வியாழக்கிழமை) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் காணி தொடர்பான பிரச்சினைகள் மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

இங்கு அரசியல் கைதிகளின் நீதி விவகாரங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையை வழங்குமாறு கலந்துரையாடலில் கலந்து கொண்ட நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷவிடம் ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

## மத நல்லிணக்கத்தினை சீர்குலைக்க...

ஸ்ரீ தலதா மாளிகை இலங்கை மக்களின் கௌரவத்தை மட்டுமின்றி முழு உலகினதும் கௌரவத்தை பெற்றுள்ள முக்கிய தலமாகும்.

அந்த வகையில் அதன் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படும் வகையிலோ அவமதிப்பு ஏற்படும் வகையிலோ கருத்துக்களை வெளியிடுவதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது இன, மத பேதமின்றி மக்கள் மத்தியில் சிறந்த நல்லிணக்கம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

அனைத்து மதங்களுமே தனது மதங்களை மதித்து செயல்படுவதுடன் அனைத்து மதங்களும் அகிம்சை வழியையே போதிக்கின்றன.

அந்த வகையில் மத நல்லிணக்கத்தை சிதைக்கும் வகையில் சமூக வலைத்தளங்கள் மூலம் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட எவரும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறு செயல்படும் நபருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அவ்வாறு பௌத்த மதம் மட்டுமின்றி எந்த மதத்திற்கு எதிராகவும் எந்த மத நம்பிக்கைக்கு எதிராகவும் செயற்படும் நபருக்கு எதிராக தண்டனைச் சட்டக் கோவை கீழ் சட்டம் நிறைவேற்றப்படும் எனவும் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## அரசியல்வாதிகள் தான் நாட்டை....

நாட்டை சீரழித்துள்ளார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊழல் மோசடி அரசியல்வாதிகள் போராட்டத்திற்கு அச்சமடைந்துள்ளார்கள், போராட்டத்தின் ஊடாகவே சிறந்த அரசியல் மாற்றத்தை உருவாக்க முடியும்.

ஆகவே நாட்டு மக்கள் போராட்டத்திற்கு மீண்டும் உயிர் கொடுக்க வேண்டும் என மக்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

## அமைச்சர் மனு நாணயக்காரவிற்கு....

கலந்துரையாடப்பட்டதுடன், பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

அமைச்சர் மனுஷ நாணயக்காரவின் கருத்தானது தவறான முன்னுதாரணம் எனவும், இதனூடாக COPE குழுவை இழிவுபடுத்துவது தெளிவாகியுள்ளதால், அது குறித்து கடும் அதிருப்தியை இஷகஉ குழு வெளியிட்டுள்ளதுடன், கணக்காய்வாளர் நாயகமும் தனது கவலையை தெரிவித்துள்ளார்.

## தமிழ் அரசுக் கட்சியின் உப...

உறுப்பினர்கள் எதிர்பார்ப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆகவே தமிழ் அரசுக் கட்சியின் உப தலைவர் பதவிக்கு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் நியமிக்க வாய்ப்புக்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பான பயிற்சி செயலமர்வு

(ரக்ஸனா)





தகவல் அறியும் உரிமை சட்டம் தொடர்பாக மட்டக்களப்பில் இடம் பெற்ற பயிற்சி செயலமர்வு.

தகவல் அறியும் உரிமை சட்டமூலம் எமது உரிமைகளை பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் மட்டக் களப்பு மாவட்டத்தில் உள்ள ஊட கவியலாளர்களுக்கும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுக்கும் பயிற்சி செயலமர்வு ஒன்று மட்டக்களப்பு மாவட்ட செயலக கேட்போர் கூடத் தில் வெள்ளிக்கிழமை (06) நடை பெற்றது.


இதன்போது மட்டக்களப்பு மாவட் டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது தகவல் உரிமை சட் டம் தொடர்பிலும், அந்த சட்டத்தை பயன்படுத்துபவர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது தொடர்பிலும் மற்றும் பொது மக்க ளுக்கும் ஊடகவியலாளர்களுக்கும் எவ்வாறு தகவல் அறியும் உரிமை சட்டம் பயன்படுகிறது என்பது தொடர்பிலும் மிகவும் விரிவாக எடுத் துரைக்கப்பட்டன.

தகவல் அறியும் உரிமை சட்டத் தின் ஊடாக எமது உரிமைகளை பாதுகாப்போம் எனும் தலைப்பில் நடைபெற்ற பயிற்சி பட்டறையில் தகவல் அறியும் சட்டம், இலங்கை பிரஜைகள் அனைவருக்கும் பொதுவா னது ஊடகவியலாளர்களுக்கும் சிவில் சமூக அமைப்பினருக்கும் சட்டத்தை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் முகமாகவே இச்செயலமர்வு இடம் பெற்றது.

இலங்கை பத்திரிகை ஸ்தாபனத் தினால் நடத்தப்பட்ட இந்த பயிற்சி செயலமர்வில் தகவல் அறியும் உரிமை ஆணை குழுவின் தலைவர் ஒய்வு பெற்ற உயர் நீதிமன்ற நிதியரசர் உபாலி அபேரத்ன, ஆணைக்குழுவின் ஆணையாளர்களான சட்டத்தரணி கிஷாலி பிண்டோ ஜெயவர்த்தன, சட்டத்தரணி ஜகத் லியன ஆராய்ச்சி, முஹம்மட் நஜியா, மட்டக்களப்பு மாவட்ட உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், இலங்கை பத்தி ரிகை ஸ்தாபனத்தின் பிரதான நிறை வேற்று அதிகாரி குமார் லோபேஸ், விடிவெள்ளிப் பத்திரிகையின் ஆசிரி யர் முகமத் பைரூஸ், பத்திரிகை ஸ்தா பனத்தின் தகவல் அறியும் உரிமை ச ட்ட திட்ட உதவியாளர் ஆர்த்தி ரவி வர்மன், உள்ளிட்ட பலர் இதன் போது கலந்து கொண்டு கருத்துக்களையும் தகவல்களையும் தெரிவித்திருந்தனர்.



# அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் திருவெம்பாவையின் திருவாதிரை தீர்த்தோற்சவம்



(வி.சுகிர்தகுமார்)

உலக இந்து மக்களால் கடைப்பிடிக்கப்படும் திருவெம்பாவை யின் திருவாதிரை தீர்த்தோற்சவம் திருவெம்பாவை வழிபாடுகள் அம்பாரை மாவட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அனைத்து ஆல யங்களிலும் இன்று இடம்பெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் நடை பெற்ற தீர்த்தோற்சவ கிரியைகளில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர். ஆலயத்தில் இருந்து அலங்கரிக்கப்பட்ட சப்பரத்தில் எழுந்தருளிய விநாயகப் பெருமான் பக்தர்கள் புடை சூழ அரோகரா எனும் வேண்டுதலுடன் வங்கக் கடலை சென் றடைந்தார். அங்கு இடம்பெற்ற அபிசேக பூஜைகளின் பின்னர் எம்பெருமான் தீர்த்தம் ஆடினார்.

கடந்த ஒன்பது நாட்கள் நடைபெற்ற திருவெம்பாவை விசேட பூஜை வழிபாடுகளிலும் பத்தாம் நாளாகிய இன்று வங்கக்கடலில் இடம்பெற்ற சமுத்திர தீர்த்தோற்சவத்திலும் பெருந்திரளான பக் தர்கள் கலந்து கொண்டனர். வழிபாடுகளையும் கிரியைகளையும் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கேதீஸ்வரக்குருக்கள் நடாத்தி வைத்தார்.

# படுகுழியிலிருந்து நாட்டை மீட்பதற்கான வழி இது தான்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ









வீழ்ந்துள்ள இந்நாட்டை மீட்பதற்கு நாட்டிற்கு டொலர்கள் தேவைப்படுவதாக வும், அதற்கு வலுவான நிலையானவேலைத் திட்டம் தேவை எனவும், அரசாங்கத்தில் உள்ள சிலர் டொலர்களை கேட்டு உலக மெங்கும்சுற்றுப்பயணம் மேற்கொண்டு வருவதாகவும், ஆனால் அவை கிடைத்த பாடில்லை எனவும், நம்பிக்கையீனமேஇ தற்கு காரணமாகும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

நாட்டிற்கு டொலர்களை கொண்டு வரக் கூடிய குழு ஐக்கிய மக்கள் சக்தியில் இருப்ப தாகவும், %4 வருடவரலாற்றில் எந்தவொரு எதிர்க்கட்சியும் நிறைவேற்றாத பணியை ஐக் கிய மக்கள் சக்தி வெற்றிகரமாகநிறைவேற் றியுள்ளதாகவும், இதன் மூலம் தமக்குள் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற வேட்கை இருப்பதுதெளிவாக புலப்படுவ தாகவும் அவர் தெரிவித்தார்.

வாயாடல்களால் அல்லது விமர்சனங் களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது எனத் தெரிவித்த எதிர்க்கட்சித்தலைவர், சில வங்குரோத்து குழுக்கள் பாடசாலைகளுக் குப் பேருந்து வழங்குவதைக் கூட விமர்சி க்கும் கீழ்தரநிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தாகவும்,

இது பாடசாலைக் கல்வியை வலுப்ப டுத்தி கல்வியை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

SriLankaFirst என்ற தொலைநோக்கின் மூலம் எமது நாட்டை உலகில் முதலிடத் திற்கு கொண்டு வருவதேதமது அணியி னரின் ஒரே நோக்கமாகும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், வாயாடல்காரர்க ளின் ஏமாற்றுவேலைகளைக் கண்டு ஏமாற வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்தார்.

பிரபஞ்சம் வேலைத்திட்டத்தின் கீழ் 64 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் (5,000,000) ரூபா பெறுமதியானபாடசாலை பேருந்து வண்டியொன்று மொரவக கீர்த்தி அபேவிக்ரம கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலை வர் சஜித்பிரேமதாஸ அவர்களால் நேற்று (05) அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ் வில் கலந்து கொண்டுஉரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# சம்மாந்துறை உடங்கா ஆற்றில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு:பொலிஸார் தீவிர விசாரணை








சம்மாந்துறை நிருபர்
ஐ.எல்.எம் நாஸிம்

அம்பாரை மாவட்டம், சம்மாந் துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செந்நெல் கிராமம் 02ஆம் பிரி வில் நெல்லுச்சேனை உடங்காறு அணைக்கட்டு நீர்த்தேக்கப் பிரதே சத்தில் நேற்று மாலை சுமார் 6.10 மணியளவில் ஆண் ஒருவரின் சடல மொன்று பொது மக்களினால் கண் டெடுக்கப்பட்டது.

சம்மாந்துறை செந்நெல் கிரா மம் 02ஆம் பிரிவு நெல்லுச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்த அப்துல் றஹீம் முஹமட் சஸ்னி (வயது 21) என்பவரின் சடலமே கண்டெடுக் கப்பட்டுள்ளது. இதனை குறித்த நபரின் பெற்றோர்கள் உறுதிப்ப டுத்தியுள்ளனர். இதே வேளை, இம்மரணம் குறித்து மரணித்தவரின் பெற்றோர்கள் சம்மாந்துறை பொலி ஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

சம்மாந்துறை பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் மரணித்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக சம்மாந்துறை ஆதார வைத்தியசா லையில் வைக்கப்பட்டுள்ளது.

இதே வேளை, சம்பவம் நடை பெற்ற இடத்திற்கு அம்பாரை மாவட்ட தடயவியல் (SOCO) பொலிஸார் நேரில் வந்து விசார ணைகளை மேற்கொண்டனர்.

மேலும், சம்பவம் நடைபெற்ற இடத்தினை சூழவுள்ள பிரதேசத் தில் அதிகளவான வெற்று மதுப் போத்தல்களை காணக் கூடியதாக இருந்தது. சம்பவம் நடைபெற்ற இடத்திலிருந்து தூரம் சுமார் 300 மீற்றர் தூரத்திலேயே சடலமாக மீட்கப்பட்ட அப்துல் றஹீம் முஹ மட் சஸ்னி என்பவரின் வீடு அமைந் துள்ளது.

# ஸ்னூக்கர் பிலியட் மேசை பந்து இறதிபோட்டியில் ஊடகவியலாளர் முதலாவது இடம்



தலவாக்கலை பி.கேதீஸ்

நுவரெலியா விளையாட்டுக் கழகத்தால் அண்மை யில் நடாத்தப்பட்ட ஸ்னூக்கர் பிலியட் மேசை பந்து போட்டிகளின் இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நுவரெலியா விளையாட்டுக் கழக மண்டபத்தில் நடை பெற்றது. 36 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றிய ஸ்னூக்கர் போட்டியின் இறுதிப் போட்டியில் 36-29 என்ற புள்ளி அடிப்படையில் முதலாம் இடத்தை ஊடகவியலாளரான பெரியசாமி சுப்பிரமணியம் பெற்றுக்கொண்டார். இரண்டாம் இடத்தை எம்.குண ரட்ன பெற்றுகொண்டார். நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் தலைவர் அருணசாந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நடைப்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதி தியாக நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி உடுகம சூரிய கலந்துக்கொண்டார்.

# சமஷ்டி அதிகாரப் பகிர்வு வேண்டும் சத்தியாக்கிரக போராட்டம் முன்னெடுப்பு

பாறுக் ஷிஹான்
( வீ.ரி.சகாதேவராஜா



ஐக்கிய இலங்கைக்குள் ஒருங் கிணைந்த வடக்கு கிழக்கு மாகா ணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வினை வலியுறுத்துவதற்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சி களும் ஓரணியல் திரளவேண்டும் என கோரி அம்பாறை மாவட்டம் பாண்டிருப்பு திரௌபதை ஆலய முன்றலில் பொது மக்கள் சத்தியாக் கிரக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு வின் ஏற்பாட்டில் வடகிழக் கில் 8 மாவட்டங்களிலும் தமிழ் அர சியல் கட்சிகளை ஒன்று படுமாறு வலியுறுத்தி கடந்த 5 திகதி தொடக் கம் எதிர்வரும் 10 ம் திகதிவரையி லான தொடர் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்ததையடுத்து இன்று மக்கள் ஒன்று திரண்டு குறித்த சத்தி யாகிரக போராட்டத்தை முன்னெ டுத்து வருகின்றனர்.

இதன் போது வடக்கு கிழக்கு சி றுபான்மை மக்களுக்கான அரசி யல் தீர்வு பேச்சுவார்த்தையில் சி றுபான்மை தமிழ் அரசியல்கட்சிகள் கட்சிகளும் ஓரணியில் திரண்டு ஒரே குரலில் ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு மீளப் பெற முடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வினை வலியுறுத்த வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள் ஒருங்கிணைக்கப்பட்டு வடக்கு கிழக்கு தனி ஒரு மாகாண அலகாக உருவாக்கப்பட வேண்டும். ஒருங் கிணைந்த வடக்கு கிழக்கு மாகாண அலகின் ஆட்சியானது மக்களால் ஜனநாயகமான தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதி நிதிகள் சபையால் மேற்கொள்ளப் படவேண்டும்.

இதில் பெண்கள் 50 வீதம் இருப் பது உறுதி செய்யப்படவேண்டும். வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட காணிகள் யாவும் மாகாண ஆட்சியின் கட்டுப்பாட்டுக்கு உட் பட்டதாக அமையவேண்டும்.

தற்போது வடகிழக்கில் காணப் படும் இராணுவமயமாக்கல் முற்றி லும் நீக்கப்பட்டு தேசிய பாதுகாப் புக்கான இராணுவம் என்பது 1983 களுக்கு முன்னர் இருந்த இடங்களில் மாத்திரம் நிலைநிறுத்தப்பட வேண் டும்.

தமிழ் மக்களின் மத கலாச்சார இடங்கள் தொல் பொருள் பிரதே சம் என அடையாளப்படுத்தப்பட்டு ஆக்கிரமிக்கப்படுவதும் அழிக்கப்ப டுவதும் உடன் நிறுத்தல் வேண்டும். பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும் என வாச கங்கள் கொண்ட சுலோகங்களுடன் கோஷம் எழுப்பியவாறு பொதுமக் கள் சத்தியாக்கிரக போராட்டத்தை தொடர்ந்து வருகின்றனர்.

# ஜனாதிபதியுடனான பேச்சுவார்த்தைக்கு முன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் மக்களை சந்திக்க வேண்டும்

## இணைப்பாளர் யாக்ட்சன் பிகிராடோ

( வாஸ் கூஞ்ஞ)



பேச்சுவார்த்தை ஓரிருவருடன் மூடிய அறைக்குள் பேசுவதைவிடுத்து திறந்த முறையில் இவ் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும். அதற்கு முன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் தங்கள் மக்களிடம் சென்று கல்விமான்கள் , பல்கலைக்கழக மாணவர்களாக இருக்கலாம் அல்லது சிறு சமூகமாக இருக்கலாம் அரசியல் நிபுணர்களாக இருக்கலாம் இவர்களையும் ஒன்று திரட்டி ஆலோசனைகள் பெற வேண்டும். என வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு மன்னார் மாவட்ட இணைப்பாளர் யாக்ட்சன் பிகிராடோ இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கட்சிகளுக்கு வலியுறுத்தும் நோக்குடன் வியாழக்கிழமை (05) மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு மன்னார் மாவட்ட இணைப்பாளர் யாக்ட்சன் பிகிராடோ ஊடகங்களுக்கு தெரிவிக்கையில்

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழு மன்னார் மாவட்ட இணைப்பாளர் யாக்ட்சன் பிகிராடோ தெரிவிக்கையில்

(வியாழக்கிழமை 05.) வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் ஒரே நேரத்தில் ஒரு செய்தியாக வடகிழக்கு மாவட்டங்களில் தமிழ் பகுதிகளில் இவ் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு இடம்பெறுகின்றது.

இவ் கவனயீர்ப்பு போராட்டம் இன்று 5ந் திகதி தொடக்கம் 10ந் திகிதி வரை (05-10,01.2023) முன்னெடுக்கப்பட இருக்கின்றது.

எங்கள் நோக்கம் வடக்கு கிழக்கு மக்கள் கௌரவமான ஐக்கிய இலங்கைக்குள் ஒருங்கிணைந்த வடகிழக்கு மாகாணத்துக்கு மீளப்பெறமுடியாத சமஷ்டி அதிகாரப் பகிர்வினை தமிழ் அரசியல் கட்சிகள் யாவும் ஓரணியில் திரண்டு வலியுறுத்த வேண்டும் என்பதே.

செய்திகள் மூலம் நாங்கள் அறிகின்றோம் ஓரிரு தமிழ் அரசியல் கட்சிகள் ஜனாதிபதியுடன் பேச இருப்பதாக தெரியவந்துள்ளது.

எங்கள் வேண்டுகோள் இந்த ஓரிரு தமிழ் கட்சிகள் மட்டுமல்ல அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுமே ஒன்றிணைந்து ஒரே குரலாக ஜனாதிபதியுடன் பேச்சு வார்த்தைக்கு செல்ல வேண்டும் என்பதே எமது மக்களின் வேண்டுகோளாக இருக்கின்றது.

இவர்களின் பேச்சுவார்த்தை ஓரிருவருடன் மூடிய அறைக்குள் பேசுவதைவிடுத்து திறந்த முறையில் இவ் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டும்.

இதற்கு முன் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் தங்கள் மக்களிடம் சென்று கல்விமான்கள் பல்கலைக்கழக மாணவர்களாக இருக்கலாம் அல்லது சிறு சமூகமாக இருக்கலாம் அரசியல் நிபுணர்களாக இருக்கலாம் இவர்களையும் ஒன்று திரட்டி ஆலோசனைகள் பெற வேண்டும்.

ஆகவேதான் இவ்வாறான நோக்கத்துடன் கடந்த நூறு நாட்கள் இவ்வாறான கவனயீர்ப்பு போராட்டத்தின் ஒரு தொடர்ச்சியாக இன்றைய இவ் போராட்டத்தையும் நாங்கள் முன்னெடுத்துள்ளோம் இதற்கு எமது மக்களின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக எமக்கு இருந்து வருகின்றது என இவ்வாறு தெரிவித்தார்.

# வாகரையில் சுவாமி ஜீவனானந்த சமூக சேவைத் திட்டம் அங்குரார்ப்பணம்!







( வி.ரி.சகாதேவராஜா)

இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஜீவனானந்த சமூக சேவைத் திட்டத்தின் கீழ் வாகரை பிரதேசத்தில் மிகவும் பின்தங்கியுள்ள கொக்குவில் ,கிருமிச்சோடை மற்றும் குஞ்சன்குளம் ஆகிய பகுதிகளில் பத்து அம்சதிட்டங்களுக்கான அடிப்படை அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நடைபெற்றது.

வாகரையில் நடைபெற்ற நிகழ்வில் கல்லடி ராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் ,உதவிப் பொது முகாமையாளர் சுவாமி சுரார்சிதானந்தர் வாகரை பிரதேச செயலாளர் மற்றும் ராமகிருஷ்ண மிஷன் தொண்டர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது, சுவாமி ஜீவனானந்தர் சமூக சேவை திட்டத்தின் கீழ், அங்குள்ள மூன்று பள்ளிகளில் அறநெறி பாடசாலைகள் புதிதாக தொடங்கி வைக்கப்பட்டன.

மக்களுக்கான குடிநீர் வசதிக்காக மூன்று அடிக்குழாய்கள் செப்பனிடப்பட்டு வழங்கப்பட்டன.


அத்தோடு ஒவ்வொரு கிழமையும் நடைபெறும் வண்ணம் நடமாடும் வைத்திய சேவை ஒன்றும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அறநெறி பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இந்த நிகழ்வின் போது வழங்கி வைக்கப்பட்டன.


இங்குள்ள உயர்வகுப்பு மற்றும் கல்லூரிக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு உயர் கல்விக்கான வசதிகள் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் இங்குள்ள மக்களுக்கான சுயசார்பு வேலைவாய்ப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லண்டன் மாநகரின் புகழ்மிக்க வில்லியம்சன் கலைக் கூடத்தில் மட்டக்களப்பு இளைஞனின் ஓவியக்கண்காட்சி!







லண்டன் மாநகரின் புகழ்மிக்க வில்லியம்சன் கலைக்கூடத்தில் சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு தனி ஆற்றுகையானது இலங்கையின் சிறுபான்மையோருக்கு எதிரான ஒடுக்கு முறைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்தும் முகமாக ஓவியக்கண் காட்சி நடாத்தப்பட்டுள்ளது.

மிகச் சிறந்ததும் மிகச் சரியானதும் ஆன ஒன்றைக் கண்டுபிடித்து அதை மட்டும் நிரூபித்து வைத்துக்கொண்டிருந்து ஏனைய எல்லாவற்றையும் நிராகரிக்கும் போக்குத்தான் நவீனத்துவமாகும்.

ஆனால் பின்னவீனத்துவமானது இந்நவீனத்துவ சிந்தனையினால் பெரும்பாலானவர்கள் ஒடுக்கப்படுகிறார்கள் என்ற உணர்வை ஏற்படுத்துவதே ஆகும். இவ்வாறாக அனைத்தும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்ற சித்தாந்தத்தையே பின்நவீனத்துவம் உணர்த்துகின்றது.

இவ்வாறாக பின்நவீனத்துவ சிந்தனையால் ஈர்க்கப்பட்டு ஒடுக்கப்பட்ட விடயங்களை மிகத் துல்லியமாக தனக்கு கைவரப்பெற்ற ஊடகமான ஆற்றுகைக் கலை மற்றும் ஓவியம் சிற்பம் மூலம் தான் பிறந்த இலங்கை தேசம் முழுவதிலும் வெளிப்படுத்திய இவர் இலங்கையில் தன் பின்நவீனத்துவ சிந்தனை வெளிப்பாடுகளால் தன் கருத்துக்களை வெளிப்படுத்த முடியாத சூழ்நிலையில் தற்போது புலம் பெயர் அகதியாக பிருத்தானியாவில் தஞ்சம் புகுந்து தனது கருத்தை மேற்குலகமே வியந்து பார்க்கும் வண்ணம் நாடு கடந்த தமிழீழ அரசாங்க அமைப்புக்களின் கலைஞர்களின் பிரதிநிதியாக பிரித்தானியாவில் தனது கலைச் செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற கலைஞரே கிருஷான் சிவஞானம் ஆவார்.

2016ம் ஆண்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலை பீடத்தில் சித்திரமும் வடிவமைப்பும் பாடத்தில் சிறப்புப் பட்டதாரியான இவர். பல்கலைக்கழக காலம் தொடக்கம் இன்று வரை இலங்கையில் மட்டுமல்லாது ஆசிய ஐரோப்பிய நாடுகளிலும் தனியாகவும் குழுவாகவும் திறந்த வெளிகளிலும் கண்காட்சி கூடங்களிலும் தனது படைப்பாக்கங்களை தனது பின்நவீனத்துவ சித்தாந்தம் மாறாத பாணியில் துல்லியமாக வெளிப்படுத்தி வருகின்றார்.

இக்கலைஞனால் இராமநாதன் நுண்கலை பீடத்தில் நிகழ்த்தப்பட்ட கிராமத்து தலையணை எனும் தனிக்கலை கண்காட்சியும் திசைகள் எனும் குழுக் கலைக் கண்காட்சியும் சிறப்பிடம் பெறுகின்றது. இது போன்று சர்வதேச கலைஞர்களுடன் ஒன்றிணைந்து செயற்படுகின்ற இலங்கையின் புகழ்பூத்த கலைக்கூடங்களான Threetha IntenationalPerformance Platform மற்றும் Saskia Fernando Gallery,Celebrate Colombo ONE WON Exhibition போன்றவற்றினூடாக பல்வேறு தலைப்புக்களில் உள்நாட்டு வெளிநாட்டுக் கலைஞர்களின் மத்தியில் தான் நிகழ்த்திய தனி மற்றும் குழு கண்காட்சிகளும் திறந்த வெளி பின்நவீனத்துவ கருத்தாக்க ஆற்றுகைகளும் மற்றையவர்களுக்கு தான் சொல்ல வந்த கருத்தை இலகுவாக கொண்டு சேர்க்கக் கூடிய நுட்பமாக விளங்கியது.

இக்கலைஞரால் பிருத்தானியாவில் லண்டன் மாநகரின் புகழ்மிக்க வில்லியம்சன் கலைக்கூடத்தில் சர்வதேச அகதிகள் தினத்தை முன்னிட்டு நிகழ்த்தப்பட்ட தனி ஆற்றுகையானது இலங்கையின் சிறுபான்மையோருக்கு எதிரான ஒடுக்கு முறைகளை சர்வதேசத்துக்கு வெளிப்படத்தும் முகமாக அமைந்திருந்ததுடன் தமிழ் மரபுத் திங்கள் கொண்டாத்தத்தை முன்னிட்டு இவரால் அவ் லண்டண் நகரில் இன்னுமொரு குழுக் கண்காட்சியும் நடாத்தப்பட்டது இவரது கலைத்துவத்தை கண்டம் கடந்தும் முன்னெடுப்பதை வெளிப்படுத்துகின்றது.

மேலும் இக் கலைஞர் உலகலாவிய கலைஞர்களை ஒன்று சேர்த்து நாடாத்தப்படுகின்ற பல்வேறு பயிற்சிப் பாசறைகளில் உள்நாட்டுளிலும் வெளிநாட்டுகளிலும் பங்குபற்றி அவர்களுடன் இணைந்து செயற்பட்டமை ஏனைய நாடுகளுக்கும் தனது கலைத்துவத்துவத்தின் ஊடாக சமூகத்தில் புரையோடிப் போய் இருந்த பிரச்சனைகளை படம் பிடித்துக் காட்டும் வண்ணம் அமைந்திருந்தது.

# விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக மட்டக்களப்பைச் சேர்ந்த மாலதி பரசுராமன் நியமனம்!





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு



விவசாய திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக மாலதி பரசுராமன் நியமிக்கப்பட்டுள்ளார்.

விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த பதவிக்கு முதன்முதலாக நியமிக்கப்பட்ட தமிழ் பெண் விவசாய ஆர்வலராக மாலதி பரசுராமன் பதிவாகியுள்ளதாக விவசாய அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விவசாய அமைச்சின் விவசாய தொழில் நுட்ப பிரிவின் மேலதிக செயலாளராக அவர் இதற்கு முன்னர் கடமையாற்றியுள்ளார்.

கன்னோருவ A9 ரகம், HOB2 எனப்படும் முதலாவது போஞ்சி மரபணு ஆராய்ச்சியை அறிமுகப்படுத்தியமை, புதிய கலப்பின கறி மிளகாய் வகையான 'பிரார்த்தனா'வை அறிமுகப்படுத்தியமை போன்ற பல ஆராய்ச்சிகளை மாலதி பரசுராமன் மேற்கொண்டதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு ஆரையம்பதியை சேர்ந்த செல்வி.பரசுராமன் மாலதி விவசாயத்திணைக்கள வரலாற்றில் பணிப்பாளர் நாயகமாக கடந்த 02.01.2023 திகதி தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

# ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேசிய போங்கல் விழா








(சுமன்)

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தேசிய பொங்கல் விழா இன்றைய தினம் வாகரை புச்சாக்கேணியில் மிக எழுச்சி பூர்வமாக இடம்பெற்றது. தமிழர் திருநாளான பொங்கல் விழாவினை முன்னிட்டு ஜனநாயகப் போராளிகள் கட்சியினால் முதன்முறையாக இத்தேசிய பொங்கல் விழா மேற்கொள்ளப் பட்டது.

ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வாகரைப் பிரதேச இணைப்பாளர்களான சதீஸ் மற்றும் லதாகரன் ஆகியோரின் ஏற்பாட்டில் கட்சியின் உபதலைவர் என்.நகுலேஸ் தலைமையில் இடம்பெற்ற இப் பொங்கல் விழாவில் கட்சியின் செயலாளர் இ.கதிர், தேசிய ஒருங்கிணைப்பாளரும், பேச்சாளருமான க.துளசி, வாகரைப் பிரதேசசபை முன்னாள் தவிசாளர் கோணலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் நெல்சன், திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் நவமேனன் உட்பட கட்சியின் மாவட்ட மட்ட பிரதிநிதிகள், உறுப்பினர்கள், போராளிகள் குடும்ப உறவுகள், இளைஞர் அணியினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

ஆரம்ப நிகழ்வாக புச்சாக்கேணி செந்தூர் முருகன் ஆலயத்தில் பொங்கல் பொங்கி பூசை வழிபாடுகள் இடம்பெற்று பின்னர் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் அதிதிகளினால் எழுச்சியுரைகளும் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நீண்டகாலமாக மின்சாரம் இல்லாத பாடசாலைக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டது









தலவாக்கலை பி.கேதீஸ்

மிக நீண்டகாலமாக மின்சார இணைப்பு வழங்கப்படாமல் இருந்த அக்கரப்பத்தனை பிரஸ்டன்தமிழ் வித்தியாலய பாடசாலைக்கு நுவரெலியா கல்வி வலய கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.கிருபாகரனின் வழிகாட்டலுக்கமைய சமூக செயற்பாட்டாளர் தேசமானி தேசபந்து சந்திரகுமாரின் நிதி அனுசரணையில் மின் இணைப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் சமூக செயற்பாட்டாளர் தேசமானி தேசபந்து சந்திரகுமார்,பாடசாலையின் அதிபர் பரமேஸ்வரன், ஆசிரியர்கள்; மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.